
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:6 Issue :23 July 2024*

கோட்டை:6 வாயில்:23 ஜூலை 2024

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## ஆசிரியர் குழு

முனைவர் ஸ்டீபன்
முனைவர் ஓ முத்தையா
முனைவர் உமாதேவி
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
முனைவர் பொ. சுரேஷ்
முனைவர் ப.தனஞ்செயன்

கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் *V*.வெங்கட்ராமன்
முனைவர் போ.கந்தசாமி
முனைவர் *P*.பாண்டிக்குமார்
முனைவர் ந. குமாரி
முனைவர் தயாநிதி
முனைவர் சந்திரசேகர்

### நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர் இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

### முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்



**+917299587879**

www.aranejournal.com
aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அகத்தினுள்

ஐங்குறு நூற்றில் நீர் நிலைகள்
பா. ரம்ஜான்

சங்ககால தமிழரின் பகுத்துண்டு பல் உயிர் ஓம்புதல்”பண்பாடு
முனைவர் ப. மணிகண்டன்

கவிதைக்கும் மெய்ப்பாட்டிற்கும் உள்ள தொடர்பு
செ. கயல்விழி

அறநெறி இலக்கியத்தில் தமிழர் மருத்துவம்
அ. குழந்தைசாமி

சிலப்பதிகாரம் காட்டும் நீர் வழிப்பயணங்கள்
சித்ரா.ரா

திருக்குறளில் வாய்மையில் சமரசம்
முனைவர் து. சிவசித்ரா

தமிழில் சொல்லகராதிகள் உருவாக்கமும் பயன்பாடும்
முனைவர் பூ. சேகர்

ஏகன் அநேகன்
அகல்யா தர்மலிங்கம்

Bhakti Marga of Saint Thyagaraja
R. Sudhalakxmi

The Evolution of Tattvas in Samkjya Philosophy
Varun Srivatsan

வேள் பாரிநாவலில் மன்னனும் மக்களும்
பொன். கனகா

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


யாரைக் கேட்டது இதயம் புதினத்தில் சமூகப்பார்வை
அ. சையதுஅலி பாத்திமா

என்.ஸ்ரீராம் கதைகளில் விளிம்பு நிலைமக்கள்
சுதா .மு

மேலாண்மை பொன்னுசாமி படைப்புகள் போற்றும் மானுட பிரவாகம்
கோ. சத்யா

வண்டிப் பாதை நாவல்காட்டும் இயற்கை மருத்துவம்
சு. சத்தியப்பிரியா

பொன்னீலனின் மறுபக்கம் புதினத்தில் சிறு தெய்வங்களும் அதன் வழிபாட்டுமரபுகளும்
திருமதி சு.வினோதா

ஒப்பியல் நோக்கில் சைவ கிறிஸ்துவ குருத்துவம்
பூபாலசிங்கம். தனேஸ்

Representation of Culture in English Language Textbooks
U. Thulasivanthana

பழங்குடி மக்களின் சித்திரைத் திருவிழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

பழங்குடி மக்களின் மாட்டுப் பொங்கல் விழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

தமிழகக் கல்வெட்டுகளில் கோயில் நிவேதன உணவுகள் - ஓர் ஆய்வு
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

கல்வெட்டுகள் வாயிலாக அறியவரும் மருத்துவ செய்திகள்
அ. குழந்தைசாமி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# மானிடவியல்



# பழங்குடி மக்களின் மாட்டுப் பொங்கல் விழா சடங்கு முறைகள்

ஆய்வாளர்: கா. இராஜமாணிக்கம்
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),
முதுகலை தமிழாய்வுத்துறை,
கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி,
திருவண்ணாமலை. 606 603
திருவள்ளுவர் பல்கலைகழக இணைவு பெற்றது.

நெறியாளர்: முனைவர் பா. சுப்புலெட்சுமி
இணைப் பேராசிரியர் & துறைத் தலைவர்,
முதுகலை தமிழாய்வுத்துறை,
கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி,
திருவண்ணாமலை. 606 603

**ஆய்வுச் சுருக்கம்**

திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாதுமலை பழங்குடி மக்களால் கொண்டாடப்படும் விழாக்களில் தனிச்சிறப்பு வாய்ந்தது பொங்கல் திருவிழாவாகும். அனைத்து ஊர்களிலும் இவ்விழா கொண்டாடப்படுகிறது. புதுப்பானையில் புத்தரிசி கொண்டு பால் பொங்கல் வைத்து சிறப்பு வழிபாடுகளை நிகழ்த்துகின்றனர். மாடுகளுக்கான விழாவாக பொங்கல் இடம்பெறுகிறது. அதனுடன் சேர்த்து முன்னோர் வழிபாட்டையும் குல தெய்வ வழிபாட்டையும் மேற்கொள்கின்றனர். முன்னோர்களுக்கான வழிபாட்டின்போது புதுத்துணி படைக்கப்படுகிறது. இறந்தோர் தெய்வங்களாகப் போற்றப்படுகின்றனர். பழங்குடிகளிடையே நடுகல் வழிபாடு சிறப்பிடம் பெறுகிறது. புற்று வழிபடு பொருளாக பயன்படுத்தப்படுகிறது. தெய்வங்களுக்கான வழிபாட்டின்போது நொச்சித் தழைகளைக் கொண்டு பந்தலிடுகின்றனர். எருது ஆட்டம் என்ற பெயரில் கோயில் காளைகளுக்கு வடம் போடுதல் நிகழ்வினை அரங்கேற்றுகின்றனர். பொங்கல் விழாவில் சிறப்பு நிகழ்வாக சேவையாட்டம் நடைபெறுகிறது. உறுமி மேளம் பக்க வாத்தியக் கருவிகளாக பயன்படுத்தப்படுகின்றன. தெருக்கூத்துக் கலைஞர்களாகவும் பழங்குடி மக்கள் திகழ்கின்றனர்.

***Study Summary***

*Pongal festival is a special festival celebrated by the Javvadumalai tribal people of Tiruvannamalai district. This festival is celebrated in all the towns. At Pudupanna they perform special worships with Buddha rice and milk pongal. Pongal is celebrated as a festival for cows. Along with that they perform ancestor worship and clan deity worship. A new cloth is created during ancestor worship. The dead are worshiped as deities. Among the tribals, Nadukal worship is prominent. Used as an object of worship. During the worship of the deities, they offer pantal with nochi leaves. In the name of Erudhu Atam, they stage the event of roping the temple bulls. Pongal is a special event where service is held. Urumi drums are used as side instruments. Tribal people are also street artists.*



**திறவுச் சொற்கள்**

மூரி எருது — கோயில் காளை, தழுவுசோறு — நைவேத்தியம், பூலோகம் — உலகம், பழவந்தண்ணீர் — புனித தீர்த்த நீர், கொல்லைப்புறம் - வயல்வெளிப் பகுதி, செடியாண்ட சாமி — முன்னோர்களை வழிபடும் இடம், சித்தாடை — குழந்தைகள் அணியும் ஆடை, பழவஞ்சாமி — கோமாதா தெய்வம்.


**முன்னுரை**

சங்க கால குறிஞ்சி மற்றும் முல்லை நில வாழ்வியல் முறைகளை ஒருவாறு கொண்டு ஒழுகும் பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டவர்கள் கிழக்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் வாழும் மலையின மக்களாகிய மலையாளி பழங்குடி மக்கள் ஆவர். இவர்கள் கல்வராயன் மலை, சேர்வராயன் மலை, பச்சை மலை, கொல்லி மலை, நவிர மலை எனப்படும் ஜவ்வாது மலை, ஏலகிரி மலை, நாயக்கனேரி மலை, சித்தேரி மலை உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக வாழ்ந்து வருகின்றனர். மலையை ஆள்வதால் மலையாளிகள் எனப் பெயர் பெற்று விளங்குகின்றனர். **1961** ஆம் ஆண்டில் தமிழகத்தில் தொல்குடிகளாக வகைப்படுத்தப்பட்ட மலையாளி சமூகத்தினர் தமிழ்மொழி மட்டுமே பேசத் தெரிந்த பூர்வ குடிகள் ஆவர். இம்மக்கள் பெயரளவில் ஒரே இனமாகக் கருதப்பட்டாலும் தாங்கள் வாழும் இடத்திற்கேற்ப பேசும் மொழிகளுக்குள்ளும், சமூக பழக்க வழக்கங்களுக்குள்ளும், பண்பாட்டு அளவிலும் மாறுபட்டு அமைகின்றனர். அந்த வகையில் திருவண்ணாமலை மாவட்டம், ஜமுனாமரத்தூர் வட்டம், ஜவ்வாது மலைப் பகுதியின் தென் பகுதியில் வாழும் வெள்ளாளர் கவுண்டர் (அ) மலையாள கவுண்டர் என அழைக்கப்படும் மலையாளி பழங்குடி சமூகத்தாரின் மாட்டுப் பொங்கல் விழா சடங்கு முறைகள் குறித்து ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும். இதன்கண் பொங்கல் விழா அறிமுகம், பட்டிசாமி வழிபாடு, முன்னோர் வழிபாடு, நடுகல் பூசை, குல தெய்வத்திற்கான

பூசை, வீட்டு தெய்வங்களுக்கான பூசை, பெருந்தெய்வ வழிபாட்டுச் சடங்குகள் உள்ளிட்ட பொருண்மைகளை மையப்படுத்தி இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**பொங்கல் விழா**

பொங்கல் விழாவைத் தமிழர்கள் இயற்கைக்கு நன்றி செலுத்தும் வகையில் அறுவடைத் திருநாளாகக் கொண்டாடி மகிழ்கின்றனர். தமிழர்களின் பாரம்பரியத் திருவிழாவாக பொங்கல் இடம்பெறுகிறது. இவ்விழாவானது தமிழகம் மட்டுமின்றி கடல் கடந்த தேசங்களான இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மியான்மர், கனடா, வட அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, மொரிசியசு, ஐரோப்பிய நாடுகள், வளைகுடா நாடுகள் என தமிழர்கள் வாழும் பெரும்பாலான பகுதிகளிலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

**பொங்கல் பொருள் விளக்கம்**

புதிய கற்காலம் தொட்டு விவசாய உற்பத்திக்கு பெரிதும் உறுதுணையாக அமைவன மாடுகள் ஆகும். அம்மாடுகளுக்கு சிறப்பு செய்யும் வகையில் இவ்விழா கொண்டாடப்படுகிறது. அதனோடு சேர்த்து குலதெய்வ வழிபாடு, முன்னோர் வழிபாடு போன்றவற்றையும் மக்கள் மேற்கொள்கின்றனர். இவ்வழிபாடுகளின்போது புதுப்பானையில் புத்தரிசி கொண்டு பொங்கல் வைத்தல் என்பது முக்கிய சடங்காக இடம்பெறுவதால் இதற்கு பொங்கல் என்று பெயர். மேலும் பொங்கல் என்பதற்கு பொங்குதல் அல்லது பொங்கி வழிதல் என்பது பொருள். பொங்கல் பானையிலிருந்து பொங்கல் எவ்வாறு பொங்கி வழிகிறதோ அதுபோல அறுவடைப் பணிகளை முடித்த விவசாய பெருங்குடி மக்களின் வாழ்வில் ஏற்படும் மன மகிழ்வை வெளிப்படுத்தும் திருநாளாக இவ்விழா அமைகிறது.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது ஆன்றோர் பொன்மொழி. அத்தகைய சிறப்பு வாய்ந்த தை மாதத்தில் கொண்டாடப்படும் இவ்விழாவானது பொதுவாக போகி, பெரும் பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் என நான்கு நாள் விழாவாக இடம்பெறுவது வழக்கம். ஆனால் பழங்குடி மக்கள் இவ்விழாவை ஏழு நாள் விழாவாக கொண்டாடி மகிழ்கின்றனர். அதிலும் குறிப்பாக மாட்டுப் பொங்கல் விழா சடங்கு முறைகள் அம்மக்களின் பண்பாட்டு கூறுகளை மிக விரிவாக எடுத்துக் கூறும் பெருவிழாவாக அமைகிறது.

**பட்டி சாமி வழிபாடு**

போகிப் பண்டிகைக்கு முன்தின நாளே பழங்குடி மக்கள் பொங்கல் விழாவை கொண்டாட ஆரம்பித்து விடுகின்றனர். தங்கள் நிலத்தில் மாடுகளை அடைத்து வைக்கும் இடமான பட்டிக்குப் பொங்கல் வைக்கும் சடங்கினை ஒவ்வொரு குடும்பத்தினரும் தனித்தனியாக மேற்கொள்கின்றனர். பச்சை பூசணிக்காய், பச்சரிசி, பசும் பால், பச்சை அவரை

கொட்டை, வறுத்து இடித்து எடுத்துக்கொண்ட கருப்பு எள் ஆகியவற்றைக் கொண்டு பூசணிக்காய் கலவை சாதத்தை படையலுக்காக தயார் செய்கின்றனர். அதனைத் தொடர்ந்து கறையான் புற்று ஒன்றை உடைத்து வந்து பட்டிக்குத் தென்திசைப் பக்கமாக நொச்சித் தழைகளைக் கொண்டு சிறிய அளவில் பந்தலிட்டு அதனுள் புற்று சாமியை இடம்பெறச் செய்வித்து, அதற்கு பால் அபிஷேகம் செய்து, பூ மாலை போட்டு, சந்தனம் குங்குமம் இட்டு, மலர் அர்ச்சனை செய்து, வாழை இலை பரப்பி ஒன்பது படையல்களை வரிசையாக இடுவர். இதற்கு அமுது படைத்தல் என்று பெயர். இப்படையல்களினூடே பூசணிக்காய் சோறு, நெய், வாழைப்பழம், வெல்லம், தயிர், தேனடை, பலாச்சுளை போன்றவை முக்கிய உணவு பொருட்களாக இடம்பெறுகின்றன.

**ஒன்பது படையலுக்குரிய வழிபடு தெய்வங்கள்**

பட்டி சாமியாக வணங்கப்படும் கோமாதாவுக்கும், குல தெய்வமான காளி அம்மனுக்கும், ஊர்க் காவல் தெய்வமான மாரியம்மனுக்கும், காக்கும் கடவுள்களான சிவபெருமான், உமையாள், விநாயகப் பெருமான், முருகப் பெருமான், வெங்கடேச பெருமாள், மகாலட்சுமி உள்ளிட்ட தெய்வங்களை வணங்கும் விதமாக இப்படையல்களை இடுவதாகக் குறிப்பிடுகின்றனர். [1]

உணவு படையல்கள் இடம்பெறும் இடத்தில் வெற்றிலையில் பாக்கு வைத்து, கற்பூரம் ஏற்றித் தேங்காய் உடைத்து, பட்டாசுகள் வெடித்து தெய்வ வழிபாட்டை முறையாக மேற்கொள்கின்றனர். அடுத்த நாள் காலையில் பட்டியைத் திறந்து மாடுகளை வெளியில் கொண்டு வரும்போது, அப்புற்றுச் சாமியை மாட்டின் காலால் மிதிபட வைத்து அதனை மண்ணோடு மண்ணாக கலந்து விடுமாறு செய்து விடுவர். வேறு வகையில் அதனை அப்புறப்படுத்த மாட்டார்கள். இவ்வாறான சடங்கை மாட்டுப் பொங்கல் அன்றும் ஊர் பொதுவில் வெகு சிறப்பாக செய்கின்றனர்.

**பட்டிசாமி குறித்த தொன்ம கதை**

மகாவிஷ்ணு ஒருமுறை மகாலட்சுமியை விட்டுப் பிரிந்து பூலோகத்தில் ஓர் வனத்தில் தவநெறி கோலத்தில் வாழ்ந்து வருகிறார். அச்சமயத்தில் புற்றொன்று அவருக்கு அடைக்கலம் தருகிறது. அவரது பசியை போக்கும் வகையில் மாடு ஒன்று தனது பங்குக்கு பாலைத் தந்து உதவுகிறது. இதனால் உழவனுக்கு பால் கிடைக்காமல் போகவே சந்தேகமடைந்த அவன் மாடு சென்ற வழியே மறைந்து சென்று பார்க்கும்போது அது தனது பாலை காட்டினுள் உள்ள ஒரு புற்றினுள் தானாகச் சொரிவதைக் கண்டு வியப்புற்று அப்புற்றை உடைத்துப் பார்க்க முற்படும்போது அவனது ஆயுதம் அப்புற்றினுள் அமர்ந்திருந்த மகாவிஷ்ணுவின் நெற்றியில்

பட்டு இரத்தமாகக் கொட்டியது. அவ்வாறு கொட்டிய அந்நிகழ்வே பின்னாளில் திருநாமத்தின் மையத்தில் செஞ்சாந்துக் குழம்பு இடம்பெறுவதற்கு முக்கிய காரணமாகவும் சொல்லப்படுகிறது. திருநாமம் குறித்து வேறொரு கருத்தும் முன்வைக்கப்படுகிறது. அதாவது, திருநாமத்தின் மையத்தில் இடம்பெறும் சிவப்புக்கோடு மகாலட்சுமியின் அம்சமாகவும், வெள்ளைக் கோடுகள் இரண்டும் மகாவிஷ்ணுவின் திருப்பாதங்கள் எனவும் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு, முன்னொரு காலத்தில் பசுவும் புற்றும் கலியுக வரதனாகக் கருதப்படும் மகாவிஷ்ணுவின் உயிரைக் காக்க உதவி புரிந்ததால் அந்நிகழ்வை நினைவுபடுத்தும் விதமாக புற்று சாமிக்கும் கோமாதாவுக்கும் பொங்கல் திருநாளில் சிறப்பு செய்யப்படுவதாக கூறுகின்றனர்.[2] இவ்வழிபாட்டை மேற்கொள்வதால் புற்றிலிருந்து வெளிப்படும் ஈசல்கள் போல மாட்டுச் செல்வம் பெருகும் எனவும் நம்பப்படுகிறது.

**மாட்டுப் பொங்கல் விழா சடங்குகள்**

பயிர் விளைச்சலுக்குக் காரணமாகத் திகழும் சூரிய தேவருக்கு நன்றி செலுத்தும் விதமாக அமையும் பொங்கல் பெரும் பொங்கல் ஆகும். அதனைத் தொடர்ந்து உழவனுக்கும், உழவுத் தொழிலுக்கும் உற்றத் துணையாக அமையும் மாடுகளுக்கு நன்றி செலுத்தும் விதமாக மாட்டுப் பொங்கலானது கொண்டாடப்படுகிறது. சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் [3] என்று வள்ளுவப் பெருந்தகைய கூறியதற்கேற்ப, உழவுத் தொழிலே உலகின் பிரதான தொழிலாக விளங்கி வருகிறது. உழவுத் தொழிலை மேற்கொள்ளும் உழவனுக்கு எல்லா வகையிலும் உதவிகரமாக இருப்பது மாடுகள் ஆகும். அத்தகைய மாடுகளை சிறப்பிக்கும் வகையில் அன்றைய தினத்தில் மாடுகள் அனைத்தையும் வயிறு நிறைய மேய விட்டுக் குளிப்பாட்டி அதன் நெற்றியில் சந்தனம், மஞ்சள், குங்குமம் இட்டும், அதன் கொம்புகளில் புது வர்ணம் பூசியும், கழுத்தில் மாலைகளிட்டும், விதவிதமான மணிகளைக் கட்டியும் அழகுபடுத்துவர். அந்தி சாயும் மாலை வேளையில் ஊரில் இடம்பெறும் அனைத்து மாடுகளையும் ஒரே இடத்தில் அதாவது ஊர் மந்தையில் இடம்பெற்றிருக்கும் பொது பட்டியில் கொண்டு வந்து அடைத்து விட்டு விழாவுக்கான ஏற்பாடுகளை செய்யத் துவங்குவர்.

**முன்னோர் வழிபாடு**

இறந்த முன்னோர் ஆவிகளின்பால் நம்பிக்கை கொண்டு வழிபடும் முறைக்கு முன்னோர் வழிபாடு (*Ancestor worship*) என்று பெயர். ஒருவர் ஒரு பிறவியில் பெறும் ஆற்றல் அவர் இறந்த பின்னும் அவருடைய இனத்தவருடன் தொடர்பு பெறுகின்றது என்பன போன்ற நம்பிக்கைகள் முன்னோர் வழிபாட்டிற்கு அடித்தளமாக அமைகின்றன.[4] மேலும் 1. இறந்த மூதாதையர்களின் ஆற்றலும் அனுபவமும் வாழ்வோரைச் செம்மைப்படுத்தும் 2. இறந்தோரின்

ஆசி என்றென்றும் வாழ்வோருக்கும் கிடைக்க வேண்டும் 3. இறந்தோரின் விருப்பங்களையும் அவருக்குப் பிடித்தமானவற்றையும் நிறைவேற்றி அவரை வழிபடுதல் மூலம் தீய ஆற்றல்களிலிருந்து முன்னோர்கள் காப்பாற்றுவர் எனவும் நம்பப்படுகிறது. [5]

**செடியாண்ட சாமியும் நடுகல் பூசையும்**

மாட்டுப் பொங்கல் அன்று காலையில் பெண்கள் அனைவரும் குளித்து விட்டு புத்தாடை அணிந்து கொண்டு கொல்லைப் புறத்தில் அமைந்திருக்கும் முன்னோர்களை வழிபடும் இடமான செடியாண்ட சாமிக்கு புதுப்பானையில் பொங்கல் இடும் பணியை மேற்கொள்வர். ஆண்கள் அவ்விடத்தில் மறைந்த முன்னோர்களின் நினைவாக எழுபப்பட்ட சிறிய அளவிலான நடுகற்களை ஒரு பலா மரத்தின் அடியில் நட்டு வைத்து அதற்கு திருமஞ்சனம் செய்வர். சில இடங்களில் பெரிய அளவிலான வீரனின் உருவம் பொறித்த நடுகல் வழிபாட்டையும் காண முடிகிறது. நடுகல் தேர்வு குறித்த செய்திகளை தொல்காப்பியர் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுதல், பெரும்படை, வாழ்த்தல் என்று ஆறு வகையில் குறிப்பிட்டுக் காட்டுவார்.[6] ஆண் தெய்வங்களுக்கான நடுகல் தேர்வு எனில் அதற்கு சந்தனத்தைக் குழைத்து திருநாமமும், பெண் தெய்வங்களுக்கான நடுகல் தேர்வு எனில் அட்டப் பொட்டும் இடுவர். நடுகற்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப படையல்களின் எண்ணிக்கையும் ஒற்றைப் படையில் மாறுபட்டு அமையும். முன்னோர்களுக்காக அவர்களின் உறவினர்கள் புதுத்துணிகளை வாங்கிப் படைக்கின்றனர். முன்னோர்களுக்கு சேவல் கோழியை அறுத்து பலி கொடுப்பது முக்கிய சடங்காக இடம்பெறுகிறது. பூசையில் குடும்ப உறுப்பினர்கள் யாராவது கலந்து கொள்ளவில்லை எனில் அல்லது பூசையில் ஏதாவது குறைபாடு நேரிடின் அவர்கள் சார்பாக அறுக்கப்பட இருக்கும் கோழி தீர்த்தம் போட்டவுடன் உதறுவது கிடையாது என்றும், உறவினர்கள் குறைகளை நிவர்த்தி செய்வதாக உறுதியளித்த பின்னர் அது உதறும் என்றும், அந்தளவுக்கு வைராக்கியம் மிகுந்த சக்தி வாய்ந்த தெய்வங்களாக முன்னோர்கள் திகழ்வதாகவும் குறிப்பிடுகின்றனர்.[7] முன்னோர்களை வழிபடும்போது, **“சின்னவங்க பெரியவங்க சித்தாடை துணிகாருங்க ஆதியில வாழ்ந்தவங்க அடிமறைந்து போனவங்க பால்மாடு பார்த்தவங்க பரமபதம் சென்றவங்க கட்டின மாளிகைக்குள் கால்போட்டு வரதுக்கு கூப்பிட்ட குரலுக்கு குறையேதும் சொல்லாம நல்லதுக்கும் கெட்டதுக்கும் நயந்து நீங்க வரவேண்டும்”** என்று வாழ்த்தி வணங்கி வழிபடுகின்றனர். [8]

**வீட்டு தெய்வங்களுக்கான பூசை**

செடியாண்ட சாமிக்குரிய வழிபாடுகளை முடித்துக் கொண்டு வீட்டிற்கு வந்தவுடன் பலி இடப்பட்ட கோழியை அறுத்து கறி சமைத்து அதனை வீட்டு தெய்வங்களுக்குப் படைத்து ஆடை ஆபரணங்கள் வைத்து வழிபடுவர். இறந்த முன்னோர்களுக்கான படையல் ஒருபுறம்

எனில் மறுபக்கத்தில் தாம் வணங்கும் பெருந் தெய்வங்களுக்கான படையலும் பூசையும் இடம்பெறும். இதில் மாமிசம் எதுவும் கலப்பது கிடையாது. வீட்டில் பூசை சடங்குகள் முடிந்த பிறகு மாரியம்மன் கோயிலுக்கும் ஒரு தழுவு சோற்றை இலையில் வைத்து எடுத்துக் கொண்டு சென்று அம்மனுக்குப் படைத்து வழிபட்டுவிட்டு வருவர். இவையெல்லாம் பெண்களுக்கான பணிகளாக இடம்பெறுகின்றன.

**பெருந்தெய்வ வழிபாட்டுச் சடங்குகள்**

ஆண்கள் மந்தையில் இடம்பெறும் மாரியம்மன் கோயில் அருகில் பெருந் தெய்வங்களுக்கான பூசைகளை செய்யும் வகையில் தரையில் மாக்கோலம் போட்டு கோட்டம் அமைப்பர். மேலும் அவ்விடத்தில் மாவிலை, பண்ணை கீரைப் பூ, ஊனாம் பூ, பச்சை மூங்கில் தளிர்கள் ஆகியவற்றைக் கொண்டு தோரணம் அமைப்பர். அதன்கீழ் தரையில் பன்னிரெண்டு சாணிப் பிள்ளையாரை வரிசையாக பிடித்து வைத்து அதன் நடுவில் புற்றுச் சாமியை உடைத்து வந்து அதனை இறைவனாக பாவித்துக் கொண்டு சந்தனம் குங்குமம் இட்டும் அமுது படைத்தும் பூசை செய்து வழிபடுவர். இவ்விடத்தில் பிள்ளையாருக்கு பன்னிரெண்டு தழுவு சோறும், சூரியனுக்கு ஒரு தழுவும், பண்டார பெட்டிக்கு ஒரு தழுவும், கத்தி, கம்பம், கொந்தம், கொடிசீலை, சங்கு, சேமகலம், மணி, கோணங்கி தொப்பி என தெய்வாம்சம் நிறைந்த பொருட்கள் அனைத்திற்கும் தலா ஒரு தழுவு சோறு வீதம் வரிசையாக ஒற்றைப்படை எண்ணிக்கையில் பல படையல்களை இடுகின்றனர். இந்த நாளில் வெங்கடேச பெருமாள் ஆண்டவனும் அண்ணாமலையாரும் மாடுகளைக் காண வருவதாக ஐதீகம். அதனால் இப்பூசையை செய்வதாகக் குறிப்பிடுகின்றனர்.[9]

**பழவஞ்சாமி வழிபாடு**

பழவஞ்சாமி என்பது பலவகையான தேவர்களையும் தன்னுள் கொண்டு விளங்கும் பசுவாகிய கோமாதாவை சுட்டுவதற்குப் பயன்படுத்தும் குறியீட்டுச் சொல்லாடலாக பயன்படுத்தப்படுகிறது. அனைத்து வகையான தெய்வங்களும் கோமாதாவுக்குள் அடக்கம் என்பதால் இச்சொல்லாட்சியை பயன்படுத்துகின்றனர். பழவஞ்சாமி வழிபாட்டை மேற்கொள்வதற்கு ஏதுவாக ஆண்களில் சிலர் வீடு வீடாகச் சென்று ஊர் மந்தையில் பொங்கல் வைப்பதற்குத் தேவைப்படும் உப்பு, அரிசி, மஞ்சள் போன்றவற்றை வாங்கி வருவர். அதனைக் கொண்டு ஒரு பெரிய பானையில் பொங்கல் வைக்கும் சடங்கினை மேற்கொள்வர். இதற்கு பால பானை பொங்கல் என்று பெயர். மறுபடியும் வீடுகள் தோறும் சென்று பிள்ளையார் உள்ளிட்ட தேவர்களின் படையலுக்குத் தேவைப்படும் பொரி, கடலை, பழம், பருப்புக் கடைசல், காய்கறி குழம்பு வகைகள் போன்றவற்றை வாங்கிக் கொண்டு வந்து சாணிப் பிள்ளையார் பிடித்து வைத்த இடத்தில் பட்டி சாமிக்கு படையல் இட்டு வழிபாடுகளை

நிகழ்த்துவர். அப்போது பெண்கள் அனைவரும் தங்கள் வீட்டிலிருந்து தேங்காய், வெற்றிலை, பாக்கு, கற்பூரம், ஊதுபத்தி, வாழைப்பழம் ஆகியவற்றைக் கொண்டு வந்து இறைவனுக்குப் படைத்து வழிபட்டு விட்டுச் செல்வர். இந்த வழிபாட்டுக்கு பழவஞ்சாமி வழிபாடு என்று பெயர்.

**பழவந்தண்ணீர் தீர்த்தம்**

பழவந்தண்ணீர் தீர்த்தம் என்பது பழவஞ்சாமி வழிபாட்டில் பயன்படுத்தப்பட்ட மஞ்சள் கலந்த சடங்கு நீர் ஆகும். ஆண்களில் சிலர் வழிபாடுகள் நிகழ்த்தப்பட்ட இடத்தில் வைக்கப்பட்ட மஞ்சள் கலந்த பழவந்தண்ணீர் தீர்த்தத்தை ஒரு மூங்கில் குடுவையில் ஊற்றி எடுத்துக் கொண்டு மந்தையில் வழிபாட்டுச் சடங்குகள் முடிந்ததை அறிவிக்கும் வகையிலும், அன்றைய நாள் விரதத்தை முடித்து வைக்கும் வகையிலும் பழவந்தண்ணீர் தீர்த்தத்தை வீடுகள்தோறும் தெளிக்கும் சடங்கை மேற்கொள்வர். அப்போது பழவந்தண்ணீர் தீர்த்தம் ஓ•••ஓ•••ஓ குழிமீஇ என்று கூவியவாறு அருகம் புல் கொண்டு அதனை வீடுகளுக்குள் சென்று இறைத்து விட்டு வருவர். அதன் பிறகே ஊரில் உள்ள அனைவரும் தத்தம் வீடுகளில் விரதத்தை முடித்துக் கொண்டு உணவருந்தத் தொடங்குவர்.

**பழவஞ்சோறு மகிமை**

பழவந்தண்ணீர் தீர்த்தத்தை வீடுகள்தோறும் தெளிக்கும் சடங்கு நிறைவடைந்த பின்னர் ஊர் மந்தையில் அனைவருக்கும் பொங்கல் சாதம் பிரசாதமாக வழங்கப்படும். இதற்கு பழவஞ்சோறு என்று பெயர். இந்த சோறானது மகிமை நிறைந்தது என்றும் ஒரு வருடத்திற்கு நம் உடம்பினுள் தங்குவதாகவும் நம்புகின்றனர். அதனால் அனைவரும் விருப்பம் கொண்டு அதனை வாங்கி உண்கின்றனர். அதன் பிறகு சாமியையும் பொங்கல் பானையையும் ஊர் கவுண்டர் வசம் ஒப்படைப்பதற்கு அவர் வீட்டிற்கு எடுத்துச் செல்வர். அங்கு நடுவூட்டில் பானையை இறக்கி வைத்து விட்டு அனைவரும் வணங்குவர். அதனைத் தொடர்ந்து ஊர் கவுண்டர் அங்கு வந்துள்ள அனைவருக்கும் தண்ணீர் தந்து சாப்பாடு போட்டு உபசரிக்கும் சாங்கிய சடங்கினை மேற்கொள்வார். பின்னர், பழவம் பானையை மட்டும் அங்கேயே விட்டு விட்டு ஊர் கவுண்டரை அம்மன் கோவிலுக்கு அழைத்து வந்து அவருக்கு சிறப்பு உபசரிப்பு செய்வர். இச்சமயத்தில் உழவனின் வாழ்வியலை சித்தரிக்கும் வகையில் ஏர்ப்பாட்டுப் பாடலைப் பாடி ஆடிக் களிப்பர். இத்தகைய சடங்குகள் முடிந்த பிறகு சாமி சிலைகளையும் அம்மன் கரகத்தையும் சாந்திக்காரர் என்றழைக்கப்படும் பூசாரி வீட்டிற்கும் கொண்டு சென்று வழிபாடுகளை நிகழ்த்துவர். அங்கு வழிபாட்டுச் சடங்குகளை முடித்துக் கொண்டு சாமி சிலைகளை மீண்டும் மாரியம்மன் கோயிலுக்கு கொண்டு வருவர். அச்சமயத்தில் பெண்கள் அனைவரும் வந்து ஆரத்தி எடுப்பர். அதன்பிறகு சாமி சிலைகளையும் அம்மன் கரகத்தையும்

கோவிலினுள் இறக்கி வைத்து விடுவர். இச்சடங்குகள் அனைத்தும் நிறைவடைய விடியற்காலை தொடங்கிவிடும். மறுநாள் காலையில் அம்மனுக்காக விடப்பட்டிருக்கும் மூரி எருதை வடம் பிடித்து இழுத்து வந்து நடப்பட்டுள்ள புற்றுச் சாமியை அதன் கொம்பால் முட்டித் தள்ளி உடைத்து விடுமாறு செய்து விடுவர். அத்துடன் மாட்டுப் பொங்கல் விழா சடங்குகள் அனைத்தும் இனிதே நிறைவுறும்.

**வடம் பிடித்தல்**

பொங்கல் அன்று ஊர்ப் பட்டிக்குள் இடம்பெறும் தெய்வத்திற்கென்று நேர்ந்து விடப்பட்ட கோயில் காளைகளுக்கு வடம் போடும் நிகழ்வினை அரங்கேற்றுவர். முதற்கண் மாரியம்மன் கோயிலில் இடம்பெறும் வடம் கயிற்றைக் கொண்டு வந்து பிள்ளையார் கோயிலில் வைத்து பூசை செய்து வணங்குவர். இதற்கு வடம் படைத்தல் என்று பெயர். அச்சமயத்தில் அதனை நான்கு திசைகளிலும் இடம்பெறச் செய்வித்து பூசை செய்து நாற்புறங்களிலும் இடம்பெறும் தேவர்களை அழைத்து வணங்கிவிட்டு மேள தாள வாத்தியக் கருவிகளின் இன்னிசையோடு ஊர்ப்பட்டிக்குள் கொண்டு சென்று மாட்டின் உரிமையாளரின் உதவியுடன் வடம் கயிறு போட்டு அதனை வெளியில் கொண்டு வருவர். அப்போது அக்காளையின் நெற்றியில் சந்தனம், குங்குமம் இட்டு, ஆரத்தி காட்டி, மாலை மரியாதையுடன் வடம் பிடித்து இழுப்பர். கோயில் பூசாரி பண்டாரப் பெட்டியில் இடம்பெறும் தெய்வாம்சம் நிறைந்த சாட்டையை கையில் எடுத்து கோயில் காளையின் பின்புறப் பகுதியில மூன்று முறை அடித்து அதனை விரட்டும் சாங்கிய சடங்கினை மேற்கொள்வார். அதனைத் தொடர்ந்து கோயில் காளையானது கோயிலைச் சுற்றி மூன்று முறை வலம் வரும் வகையில் வடம் கயிறை பிடித்தவாறு ஆண்கள் பலர் அதனை மேள தாள வாத்திய கருவிகளின் இன்னிசையுடன் ஆரவாரம் செய்தவாறு கொண்டு வருவர். அச்சமயத்தில் காளையும் கட்டுக்கடங்காது சீறிப்பாய முயலும். ஆண்கள் அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் வடம் பிடித்து இழுப்பர். இறுதியில் மூரி எருதானது அருள் வந்தவாறு பழவஞ்சாமியாக வணங்கப்பட்ட புற்றை தனது கொம்பாலும் காலாலும் முட்டி மோதி அதனை மண்ணோடு மண்ணாக கலந்து விடுமாறு செய்து விடும். இவ்வாறு எருது ஆட்டம் என்ற பெயரில் நடைபெறும் இச்சடங்கானது மூரி எருது வடம் பிடித்தல் என்று குறிப்பிடப்படுகிறது. இதனை **“பொங்கல் நாளன்று நிகழும் ஒரு திருவிழாவின்போது, தோலாலான கயிறுகளால் பிணைக்கப்பட்ட எருதுகள், ஊர் மந்தைக்குக் கொண்டு வரப்பட்டு, இசைக் கருவிகளின் முழக்கத்துடன் ஊர்மக்களின் உற்சாகக் கூக்குரலுக்கிடையே பத்து அல்லது பதினைத்து பேர் கொண்ட இரு அணிகளாகப் பிரிந்து மாட்டின் கழுத்தில் கட்டபட்டிருக்கும் தோல்கயிற்றை பிடித்து எருதைக் கட்டுப்படுத்துவர். ஒரு சிலர் மூங்கில் குச்சிகளுடன் எருதை சீண்டுவர். சில நேரங்களில் மலைச்சரிவுகளில்**

**வேகமாக வரும் எருதைக் கட்டுப்படுத்த முடியாமல் பார்வையாளர்களை எருது தாக்கி காயமடையச் செய்யும். இந்த விழா மிகவும் பிரபலமானது"** என எட்கர் தர்ஸ்டன் பதிவு செய்கிறார். [10]

**முடிவுரை**

பழமையான மாந்தரினத்தின் தொல்குடிக் கூறுகள் பலவற்றை தன்னகத்தே கொண்டு திகழ்பவர்கள் பழங்குடி மக்கள் ஆவர். அம்மக்களின் சமூக பண்பாட்டை அறிந்து கொள்வதற்கு ஏதுவாக சடங்கு முறைகள் பெரிதும் பயன்படுகின்றன. பொங்கல் விழா சடங்கு முறைகளின் வாயிலாக பழங்குடி மக்களின் சமயம் சார்ந்த பண்பாட்டுக் கூறுகளையும் கலைகள் சார்ந்த பண்பாட்டுக் கூறுகளையும் இனக்குழு வாழ்வியல் சார்ந்த ஒழுகலாறுகளையும் ஒருவாறு அறிந்து கொள்ள முடிகிறது. முன்னோர் வழிபாடு தொடங்கி சிறு தெய்வ வழிபாடு பெருந்தெய்வ வழிபாடு என அனைத்து தெய்வங்களையும் வழிபடும் சமயப் பொறை கொண்ட மக்களாக பழங்குடிகள் திகழ்கின்றனர். மாடுகளை செல்வமெனக் கருதி போற்றி வழிபடுகின்றனர். காடுகிழாள் செல்வியாகிய கொற்றவையை குலதெய்வமாகக் கொள்கின்றனர். வழிபாட்டின்போது ஆடுகளையும் கோழிகளையும் பலியிடும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். தெய்வங்களுக்காக சிந்தும் இரத்தத் துளிகளுக்கு ஏற்ப அவ்வினம் பெருகும் என்றும் நம்புகின்றனர். இறை தொடர்பான நற்செயல் காரியங்கள் அனைத்தும் ஒற்றைப்படை எண்ணிக்கையில் அமைவதை நல்லது என கருதுகின்றனர்.

**அடிக்குறிப்புகள்**

1. லட்சுமணன், நாட்டு பூசாரி, வயது 63, தென்மலை அத்திப்பட்டு, ஜமுனாமரத்தூர் வட்டம், ஜவ்வாதுமலை.
2. சேமன், தெருக்கூத்து கலைஞர், வயது 66, நெல்வாய், ஜமுனாமரத்தூர் வட்டம், ஜவ்வாதுமலை.
3. குறள்: 1031.
4. பேரா டாக்டர் நா, பாலுசாமி (மு.பதி), வாழ்வியற் களஞ்சியம் தொகுதி பதினான்கு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், பதி 2009, ப.30.
5. மேலது, பக் 30-31
6. முனைவர் கி, இராசா (உ.ஆ) தொல்காப்பியம் பொருளதிகாரம் (பகுதி 1), பாவை பப்ளிகேஷன்ஸ் சென்னை -14, பதி டிசம்பர் 2007, ப.35.
7. வெங்கடேசன், வயது 43, நெல்வாய், ஜமுனாமரத்தூர் வட்டம், ஜவ்வாதுமலை.
8. காளி, அம்மன் கோயில் பூசாரி, வயது 75, நெல்வாய், ஜமுனாமரத்தூர் வட்டம், ஜவ்வாதுமலை.

9. மணி, நாடகக் கலைஞர், வயது 40, நெல்வாய், ஜமுனாமரத்தூர் வட்டம், ஜவ்வாதுமலை.

10. *Edgar Thurston 1909.2002. castes and Tribes of Southern India, Asian Educational Service, vol.IV, P.418*

**துணைநூற் பட்டியல்**

1. இராசா, முனைவர் கி, (உ.ஆ) தொல்காப்பியம் பொருளதிகாரம் (பகுதி 1), பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை -14, பதி டிசம்பர் 2007, ப.35.


2. பாலுசாமி, பேரா டாக்டர் நா, (மு.பதி), வாழ்வியற் களஞ்சியம் தொகுதி பதினான்கு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், பதி 2009, ப.30.

3. *Edgar Thurston, 1909. 2002. castes and Tribes of Southern India, Asian Educational Service, vol .IV, P.418*

**நிழற்படங்கள்**

பட்டி சாமி வழிபாடு (I) (II) முன்னோர் வழிபாடு







பழவஞ்சாமி வழிபாடு பால பானை

பழவந்தண்ணீர்







தீர்த்தம் போட செல்லுதல் பலி சோறு

மாவிளக்கு பூசை







# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2024, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்-அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com